பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 07 2024 **FRIDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் நாடு பெருமையடையும் வகையில் சிறப்பாக செயல்படுவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. நாடு முழுவதும் உள்ள மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சுயஉதவிக்குழுவினர் உள்ளிட்ட அமைப்புகள் கலந்துகொள்ளும் நித்தி ஆயோக்கின் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

3. உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸில் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்தது தொடர்பாக இதுவரை ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4. அஸ்ஸாம் மாநிலத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக 21 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5. கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய குழுவினருடன் பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று உரையாடினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நாடு பெருமைப்படும் வகையில் வீரர்கள் சிறப்பாக செயல்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுடைய வாழ்க்கைப்பயணமும், வெற்றியும் 140 கோடி மக்களுக்கு நம்பிக்கையை அளிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

ஆஸ்திரேலியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Richard Marles'**-வுடன் தொலைபேசி வழியாக நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பரஸ்பரம் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இந்த பேச்சுக்களின்போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தொடர்ந்து இரண்டாவது முறையாக பாதுகாப்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு ராஜ்நாத் சிங்குக்கு, ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

<<<<<>>>>>

நாடு முழுவதும் உள்ள மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சுயஉதவிக்குழுவினர் உள்ளிட்ட அமைப்புகள் கலந்துகொள்ளும் நித்தி ஆயோக்கின் மாநாடு இன்று  புதுதில்லியில் தொடங்குகிறது.

நித்தி ஆயோக் அமைப்பின் மூலம் நடத்தப்படும் இந்த மாநாட்டில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் அதன் தொடர்புடைய அமைப்புகளை சேர்ந்தவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

ஒவ்வொரு மகளிரின் பொருளாதாரமும் மேம்பாடு அடைவதற்கான வழிகளை காணவும் சுயதொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் கருத்துப்பகிர்வுகள் இடம்பெறும்.

இந்த மாநாட்டின்போது தங்கள் வாழ்வில் முன்னேற்றம் கண்ட மகளிர் தங்களது முன்னேற்றம் குறித்த கருத்துக்களை பகிர்ந்துகொள்ள உள்ளனர்.

நித்தி ஆயோக் அமைப்பின் அதிகாரிகள் மகளிர் முன்னேற்றத்திற்கு தேவைப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கவுள்ளனர்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸில் நடைபெற்ற ஆன்மிக நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்தது தொடர்பாக நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகளை கொண்ட விசாரணை குழு நேற்று ஆலோசனை நடத்தியது.

லக்னோவில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், ஓய்வு பெற்ற அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி பிரிஜ்ஜேஷ் குமார் ஸ்ரீவஸ்தவ், ஐ ஏ எஸ் அதிகாரி திரு ஹேமந்த் ராவ், ஓய்வுபெற்ற ஐ பி எஸ் அதிகாரி திரு பவேஷ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்குழு விரைவில் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொள்ளவுள்ளது.

விசாரணைக்கு பிந்தைய அறிக்கையை இரண்டு மாதத்திற்குள் மாநில அரசிடம் இக்குழு சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, 121 பேர் உயிரிழந்த இச்சம்பவம் தொடர்பாக ஆறு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

முக்கிய குற்றவாளியான திரு பிரகாஷ் மதுகூர் குறித்த தகவலை அளிப்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜாமினில் வெளிவர முடியாத வாரண்ட் விரைவில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு குறித்த இரண்டு நாள் உலக மாநாடு புதுதில்லியில் நேற்று நிறைவடைந்தது.

இதுகுறித்து மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், செயற்கை நுண்ணறிவு, புதுமை கண்டுபிடிப்புகள் திறன்களை வளர்த்தல், நிர்வாகம் தொடர்பாக இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

50 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள், 12 ஆயிரம் செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தலைமை இயக்குனராக இந்திய தகவல் பணியை சேர்ந்த மூத்த அதிகாரி திரு **‘Dhirendra Ojha ’** நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் பெய்த கனமழையால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக 29 மாவட்டங்களில் வசிக்கும் 21 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட **'Morigaon** மாவட்டத்திற்கு ஆளுநர் திரு குலாப் சந்த் கட்டாரியா சென்று அங்குள்ள மக்களிடம் தேவைகளை கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மஜுலி, தேமாஜி, லக்கிம்பூர் மாவட்டங்களில் அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா சென்று வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டார்.

அம்மாநிலத்தில் கடந்த 24 மணிநேரத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மேலும் ஆறு பேர் உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன்மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 52-ஆக அதிகரித்துள்ளது.

3 ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட கிராமங்களும், 57 ஆயிரம் ஹெக்டேர் வேளாண் நிலங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

பிரம்மபுத்திரா, பாரக், ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் அபாயக்கட்டத்தை தாண்டியுள்ளதாக கூறப்படுகிறது.

145 சாலைகள், இரண்டு பாலங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அஸ்ஸாம் மற்றும் அண்டை மாநிலமான அருணாச்சலப்பிரதேசத்தில் அதி கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து, 247 முகாம்களும், 451 நிவாரண விநியோக மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மீட்புப்பணியில் ஈடுபட தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

<<<<<>>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவையின் சிறப்புக்கூட்டம் வரும் 8-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

அப்போது முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் நம்பிக்கை வாக்கு கோரவுள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்ற பிறகு, அமைச்சரவையில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<>>>>>

மணிப்பூரில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, அம்மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் மேலும் இரண்டு நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களுக்கும் நாளை வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மத்தியப்பிரதேச உயர்நீதிமன்ற நீதிபதி **‘Sheel Nagu ’** பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பொதுமக்களுக்கு அரசுத்துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் கிடைப்பதற்கான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்மூலம், எட்டு லட்சத்து 74 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 11-ஆம் தேதியன்று தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் விரிவாக்க நிகழ்ச்சியிலும், 15-ஆம் தேதியன்று முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்க நிகழ்ச்சியிலும் தாம் பங்கேற்கவுள்ளதையடுத்து அப்பகுதியை சேர்ந்த சட்டப்பேரவை – நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளுமாறு அவர்களுக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்மூலம், 14 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருவதாகவும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

அமெரிக்காவின் வடக்கு கலிஃபோர்னியா மாகாணத்தில் பரவிய காட்டுத்தீ காரணமாக அப்பகுதியில் வசிக்கும் சுமார் 28 ஆயிரம் பேரை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கலிஃபோர்னிய வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

கடும் வெப்பநிலை காரணமாக இந்த தீ பரவியதாக கூறப்படுகிறது.

தீ பரவிய 3 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் இதுவரை ஏழு சதவீதம் அளவிற்கே தீ அணைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மேலும் ஒருவார காலத்திற்கு வெப்பநிலை 47 டிகிரி செல்சியஸ் அளவிற்கு நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-11 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **‘Takuma Obayashi-**ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 17-21, 21-7, 21-8 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் **‘Anthonisen - ’** நெதர்லாந்தின் ‘’**Alyssa** இணையை வென்றது.

<<<<<<>>>>>

உலக டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியினரின் வெற்றிப்பேரணி மும்பையில் நேற்றிரவு நடைபெற்றது.

மரைன்ட்ரைவிலிருந்து, வான்கடே மைதானம் வரை திறந்தவெளி பேருந்தில் சென்ற இந்திய அணி வழிநெடுங்கிலும் ஆயிரக்கணக்கான ரசிகர்களின் வாழ்த்துகளை பெற்றனர்.

<<<<<<>>>>>

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. சேலத்தில் இரவு மணி 7.15-க்கு தொடங்கவுள்ள இப்போட்டியில் சென்னை அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<*END*>>>>>>